மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 433, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண். 434, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

434—

குட்டி கவுண்டலூரில் குடிநீர்த் தட்டுப்பாடு.

*9644—திரு. கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஒன்றியம் சாப்பரம் ஊராட்சி குட்டிகவுண்டலூரின் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஆ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம் சாப்பரம் ஊராட்சியைச் சேர்ந்த குட்டிக்கவுண்டலூர் குடியிருப்பிற்கு இந்நிதியாண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி முடிக்கப்பட்டு இன்னும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட 3 கிராமங்கள் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, உடனடியாக இந்த கோடைக்காலத்தில், வறட்சியால் வெகுவாக பாதிக்கப்படுவதற்குள் குறைந்தது 15 நாட்களுக்குள் அந்த மின் இணைப்பைக் கொடுத்து தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக மின் இணைப்பு கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் நிலத்தடி நீர் அதிகமாக குறைந்து இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே பல நூற்றுக் கணக்கான ஆழ் குழாய் கிணறுகள் வறண்டு இருக்கின்றன. அவைகளை மேலும் ஆழப்படுத்த துரிதமாக அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்து இருந்தாலும் போதிய உபகரணங்கள் இல்லாமல் அவர்கள் வேலையை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, உடனடியாக அரசு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அத்தனை ஆழ்துளைக் கிணறுகளுக்கும் உரிய உபகரணங்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 435, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர்.

435—

நெகமம் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றல்

*10150-திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமம் பேரூராட்சிக்குப் போதிய வருமானம இல்லாததால் அதை ஊராட்சியாக மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம் பெரிய நெகமம் முதல்நிலை பேரூராட்சியை ஊராட்சியாக வகைமாற்றம் செய்வதற்கான சாத்தியம் இல்லை.